ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2115/27 - 2019 මාර්තු මස 19 වැනි අඟහරුවාදා - 2019.03.19

*2115/27 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

இலக்கம் 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழான பணிப்புரை

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணாந்து ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 32(ஆ) மற்றும் 33 ஆம் வாசகங்களின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், தற்போது பதிவு இடைநிறுத்தப்பட்டுள்ள ஹொக்கி விளையாட்டு தொடர்பான தேசிய சங்கமான இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் பதிவு இடைநிறுத்தத்தினை நீடிப்பதுடன் சம்மேளனத்தின் பணிகளை மேலும் நடாத்திச்செல்வதன் பொருட்டு மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின்கீழ் தேர்தற் கடமைகளை முடிவுறுத்துவதன் பொருட்டும், தற்காலிக செயலொழுங்காக கீழ்வரும் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபையினை நியமனஞ் செய்கின்றேன்.

1. திரு. நிசாந்த வீரசிங்க - தலைவர்
2. திரு. எச். ஏ. டபிள்யூ. அபயகுமார - செயலாளர்
3. திருமதி கே. கே. எஸ். கே. வீரசிங்க - பொருளாளர்

மேலும் 2019, மாச்சு மாதம் 18 ஆந் திகதியிலிருந்து இலக்கம் 2053/7 மற்றும் 2018.01.08 ஆந் திகதியுடையதாக பிரசுரிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

ஹரீன் பெர்ணாந்து (பா. உ.),<br>
தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு<br>
மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,<br>
*2019, மாச்சு 18.*

*04-88*